# தமிழ் உறவுமுறைப் பெயர்களின் அமைப்பும் அவை பால் உணர்த்துமாறும் - ஓர் அமைப்பியல் நோக்கு

**க. இரகுபரன்**
மொழித் துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு மொழியின் பெயர்ச்சொற் றொகுதியில் உறவுப் பெயர்கள் இன்றியமையாத கூறாக அமைகின்றன. உறவுப் பெயர்கள் அவ்வம் மொழியைப் பேசும் சமூகத்தின் பண்பாட்டுக்கேற்ப சில தனித்துவங்களைக் கொண்டனவாயும் அமையும். உதாரணமாகத் தமிழில் உள்ளது போல் ஆங்கிலத்தில் மூத்த, இளைய (ஆண்/பெண்) சகோதரர்களைக் குறிக்கும் உறவுப் பெயர்கள் இல்லை. அவ்வகையில் உறவுப் பெயர்கள் ஒரு மொழிச் சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடு என்று கொள்ளலாம். தமிழில் உறவுப் பெயர்கள் தொடர்பான ஆராய்ச்சி தொல்காப்பியர் காலம் முதலாகவே இடம்பெற்று வருகிறது. வரலாற்று ரீதியில் நோக்கும்போது தமிழில் ஒரு உறவு குறித்து ஒரு காலத்தில் வழங்கிய பெயர் பிற்காலத்தில் வேறு உறவு குறித்ததாகப் பொருள் மாற்றம் பெற்றுள்ளமையையும் அவதானிக்க முடியும். ஆகையால் உறவுப் பெயர் தொடர்பான ஆராய்ச்சி வரலாற்று நோக்கிலும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. தமிழ் வழங்கும் பிராந்தியங்களை எடுத்து நோக்கும்போது குறித்த ஒரு உறவுமுறை குறித்து ஒரு பிரதேசத்தில் ஒரு பெயரும் வேறொரு பிரதேசத்தில் பிறிதொரு பெயருமாக வேறுபட்டமைவதையும் காணமுடிகிறது. சமூக ரீதியில் நோக்கும்போது தமிழ் மக்களுக்குள் பிராமண சமூகத்தவர், முஸ்லிம் சமூகத்தவர் முதலாக வேறு வேறு சமூகத்தவர் மத்தியில் ஒரு உறவு முறை குறித்து வேறு வேறு பெயர்கள் வழங்கக் காணலாம். அவற்றை ஒப்பியல் அடிப்படையில் ஆராய வேண்டியுள்ளது. மொழி அமைப்பு ரீதியில் தன்மை, முன்னிலை, படர்க்கை நிலைகளில் சில உறவுமுறைப் பெயர்கள் வேறுபட்டமையக் காணலாம். உறவுமுறைப் பெயர்கள் பால் அடிப்படையிலும் தெளிவான வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை அமைப்பியல் ரீதியில் அணுக வேண்டியுள்ளது. தமிழில் வழங்கும் உறவுப் பெயர்கள் தொடர்பாக இந்த ஆய்வானது அமைப்பியல் ரீதியில் பல கோணங்களில் ஆராய்கிறது.

***பிரதான சொற்பதங்கள்:*** *உறவுமுறைப் பெயர், சமூகம், பிரதேசம், பால், அமைப்பு.*

இரத்த சம்பந்தமாகவும் திருமண வழியாகவும் இருவருக்கு இடையிலான உறவினைச் சுட்டும் பெயர்கள் உறவுப்பெயர், முறைப்பெயர் என்னும் பெயர்களாற் சுட்டப் பெறுகின்றன. உறவு என்னும் சொல் தொடர்பு என்றும் பொருள் படுவது. இரத்த சம்பந்தமான அல்லது திருமண வழியான தொடர்புகளை மாத்திரம் அன்றி, ஆசிரியர் – மாணவர், முதலாளி – தொழிலாளி என்றவாறான வேறுவகைத் தொடர்புகளைக் குறிக்கவும் அச்சொல்லைக் கையாள்வதுண்டு. உறவுமுறை அல்லாத வேறு வகையான தொடர்புகளைச் சுட்டுவதற்கு முறை என்ற சொல்லைக் கையாள்வதில்லை. அதுமட்டுமன்றி முறைப்பெயர் என்பது தொல்காப்பியர் காலம் முதலாகவே வழங்கி வருகிறது. எனினும் உறவு, முறை என்னும் இரு சொற்களுமே குறித்த பொருளைத் திருப்திகரமாகத் தரவில்லை என்றே தோன்றுகிறது. அதனால்தான் இரண்டும் இணைந்த நிலையில் உறவுமுறை என்ற கூட்டுப்பெயர் வழக்கிற்கு வந்துள்ளது. எவ்வாறாயினும்,

> "முறைப் பெயர்கள் இல்லாத மொழி இல்லையெனத் துணியலாம். முறைப் பெயர்களின் எண்ணிக்கை, பொருள், பயன்பாட்டுமுறை, அமைப்பு என்பன மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. தமிழில் வழங்கும் முறைப் பெயர்களையும் ஆங்கிலத்தில் வழங்கும் முறைப் பெயர்களையும் ஒப்பு நோக்கும்போது இவ்வேறுபாடுகள் எளிதிற் புலனாகும். ஒரே மொழியைப் பேசுவோர் மத்தியிலும் முறைப் பெயர்கள் வேறுபடுவதுண்டு."[1]

மொழி என்பது சமுதாயத்தின் தொடர்பு சாதனம். சமுதாயத்தின் அடிப்படை அலகாக, குடும்பம் அமைகிறது. குடும்ப நிலையிலும் குடும்பம் கடந்தும் பல நிலைப்பட்ட உறவுகள் காணப்படுவதுண்டு. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான திருமண பந்தம் உறவுப் பெயரின் ஊற்றாக அமைகின்றது. அந்தத் திருமண பந்தத்தின் மூலம் கணவன், மனைவி என்னும் உறவுப் பெயர்கள் உருவாகின்றன. அவர்களுக்குப் பிள்ளை பிறக்கும்போது தாய் / அம்மா, தந்தை / அப்பா, மகன் / மகள் என்னும் உறவுப் பெயர்கள் உருவாகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் ஆணும் பெண்ணுமாகப் பிறக்கின்றபோது அண்ணன், அக்கா, தம்பி, தங்கை என்னும் உறவுப் பெயர்கள் உருவாகின்றன. அவர்கள், வேறு குடும்ப நபர்களோடு திருமண சம்பந்தம் கொள்ளும்போது மைத்துணன் / மச்சான், மைத்துணி / மச்சாள், அண்ணி முதலான உறவுப் பெயர்கள் உருவாகின்றன. அத்திருமண பந்தத்தால் அடுத்த சந்ததி உருவாகும் போது மருமகன், மருமகள், மாமன், மாமி, பேரன், பேத்தி என்பனவும் மச்சான், மச்சாள் முதலானவையுமாக உறவுப் பெயர்கள் பல உருவாகின்றன.

தாய்க்குச் சகோதரிகள் இருக்கும் நிலையில் சிறியதாய் / சின்னம்மா, பெரியதாய் / பெரியம்மா முதலானவையும் தந்தைக்குச் சகோதரர்கள் இருக்கும் நிலையில் பெரியதந்தை / பெரியப்பா, சிறியதந்தை / சித்தப்பா முதலானவையும் உருவாகின்றன. இவ்வாறு குடும்ப அங்கத்தவர்கள் பெருகப் பெருக உறவுப் பெயர்களும் பெருகுகின்றன. ஆனால் தற்காலத்தில் குடும்பக்கட்டுப்பாடு, நெருக்கமற்ற குடும்ப வாழ்க்கைமுறை முதலான காரணிகளால் உறவுப் பெயர்கள் குறைந்து வருகின்றன அல்லது அவற்றின் பயன்பாடு குறைந்து வருகின்றது. ஒரு பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்ற நிலை பல குடும்பங்களில் காணப்படுகின்றது. அவ்வாறாயின் அக்குடும்பத்தின் பயன்பாட்டில் அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, அண்ணி, மச்சான், மச்சாள் முதலான உறவுப் பெயர்களின் பயன்பாடு இல்லாது போய்விடுகிறது. அந்த ஒரே பிள்ளை வளர்ந்து திருமண பந்தத்தில் இணைந்தாலும், திருமணம் செய்தவரும் குடும்பத்துக்கு ஒரே பிள்ளையாக அமைந்தால், அவர்கள் பிள்ளை பெற்றாலும் மாமா, மாமி, சித்தப்பா, சின்னம்மா, பெரியப்பா, பெரியம்மா முதலான உறவுப் பெயர்களுக்கு இடமில்லாமற் போய்விடுகிறது. இவ்வாறான நிலைமை சமூகத்துக்கு ஆரோக்கியமானதல்ல் மொழிக்கும் ஆரோக்கியமானதல்ல. உறவுமுறைப் பெயர்கள் பலவற்றை அகராதிகளில் மாத்திரமே கண்டு கொள்ள வேண்டியதாய் விடும். பல உறவுகளையும் அவற்றிடையே அன்னியோன்னியத் தன்மையையும் கொண்ட சமுதாயமே பசுமையான சமுதாயமாக அமையும். உறவுகள் குறைவதாலும் அவற்றிடையே அன்னியோன்னியத் தன்மை குறைவதாலும் உறவுப் பெயர்களின் பயன்பாடு குறைந்து வருவதோடு வேறு சில காரணிகளால் காலத்துக்குக் காலம் உறவுப் பெயர்களில் மாற்றமும் ஏற்பட்டு வருகின்றது. அந்நிலையில் தமிழின் உறவுப் பெயர்களைத் தொகுப்பதும் அவற்றை அமைப்பு ரீதியாகப் பகுத்தாராய்வதும் அவ்வவற்றினை வரலாற்று ரீதியாக நோக்குவதும் எல்லாம் பயனுடைய முயற்சிகளாகவே அமையும். இக்கட்டுரையில் தமிழில் வழங்கும் முறைப் பெயர்கள் பிரதானமாக அமைப்பு ரீதியாகப் பகுத்து நோக்கப்படுகின்றன.

அமைப்பு ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் நோக்கும்போது அப்பன், ஐ, ஆய், ஐயன், அண்ணன், அக்கை, பி, கை, மாமன், மாமி என்பனவும் இவை

போன்றனவுமான சொற்களே தமிழில் அடிப்படையான உறவுமுறைப் பெயர்களாகக் காணப்படுகின்றன. இவ்வாறான அடிப்படை உறவுமுறைப் பெயர்கள் மூவிடப் பெயர்களின் உடைமைப் பொருள் உணர்த்தும் வடிவங்களோடு இணைந்த நிலையிலே வழங்கும் வடிவங்களே தமிழில் உறவுப் பெயர்களாகப் பெருமளவில் வழங்குகின்றன. அவ்வாறாக வழங்கும் உறவுப் பெயர்களை முதலில் நோக்கலாம். பெரும்பாலான உறவுமுறைப் பெயர்கள் படர்க்கை இடப் பெயர்களோடு சேர்ந்த நிலையிலேயே வழங்குவதால் அவைபற்றி முதலில் நோக்குவோம்.

**படர்க்கை இடப்பெயரோடு இணைந்த உறவுமுறைப் பெயர்கள்**

தான், தாம் என்பவை தமிழில் படர்க்கை இடப்பெயர்கள். அவற்றுள் தான் என்பது ஒருமை குறித்து வழங்குவது தாம் பன்மை குறித்து வழங்குவது. தமிழில் பெரும்பாலான உறவுப் பெயர்கள் தாம் என்னும் பன்மைப் படர்க்கைப் பெயரின் உடைமை வேற்றுமை ஏற்ற நிலையிலான 'தம்' என்பதோடு இணைந்த நிலையில் வழங்குகின்றன.

> " 'தகப்பன்' என்ற சொல் 'தம்', 'அப்பன்' என்ற இரு சொற்களின் தொகையே் இச்சொல் பிராமணர்களால் சில சமயம் 'தமப்பன்' என்றே வழங்கப்பெறும். மலையாளத்தில் 'தகப்பன்' 'தம்மப்பன்' என்ற இரு சொற்களுமே ஆட்சியில் உள்ளன. 'தந்தை' என்ற சொல், 'தகப்பன்' என்பதைக் காட்டிலும் இலக்கியத் தன்மை வாய்ந்ததாகும். இச்சொல் கன்னடத்தில் 'தந்தெ' என்றும், தெலுங்கில் 'தண்ட்ரி' என்றும் மலையாளத்தில் 'தந்த' என்றும் வழங்கும்…………………….. 'தந்தை' என்பதிலும் 'தம்' என்பதே முன்னிணையாம் என்பதில் ஐயம் இல்லை. முன்னோர் என்ற பொருளுடைய 'முந்தை' என்பதில் 'முன்' முதல் மொழியாவதையும் ஈண்டு ஒப்பிடுக. அத்தொகைச் சொல்லின் இரண்டாவது உறுப்பாகிய 'தை' என்பதன் இயல்பு அறியக் கூடாததாக உளது. அது, தந்தை எனும் பொருள் குறிக்கிறது என்பது உண்மை."[2]

'தாய்' என்ற சொல்லும் இவ்வாறானதே. 'ஆய்' என்ற சொல்லின் முன்னே தம் என்னும் படர்க்கைப் பெயர் இணைந்த நிலையிலேயே (தம்+ஆய்) 'தாய்' என்ற சொல் உருவாகியுள்ளது. பண்டைத்தமிழில் 'தன்னை' என்ற சொல்லும் இதே பொருளில் வழங்கியது. அது தம் +அன்னை என்ற இணைப்பால் உருவானதாதல் வேண்டும்.

பண்டைய தமிழில் மூத்த சகோதரனைக் குறித்த சொல்லாக 'ஐயன்' என்ற சொல் வழங்கியது. அந்த மூலச் சொல்லின் முன்னர் 'தம்' என்னும் படர்க்கைப் பெயர் ஒட்டிய நிலையிலே (தம்+ஐயன்) 'தமையன்' என்னும் உறவுமுறைப் பெயர் பிறந்தது. மூத்த சகோதரியைக் குறிப்பதான 'அக்கை' என்ற சொல்லும் இவ்வாறே (தம்+அக்கை) 'தமக்கை' என்று ஆகியது. இவ்வாறே இளைய சகோதரனைக் குறிக்கும் 'தம்பி' என்ற சொல் (தம்+பி) பிறந்தது. 'பி' என்பது பின் பிறந்தவன் என்ற பொருளைத் தருவதாகும். (எம்பி, உம்பி, நம்பி என்பனவற்றை நோக்குக). 'கை' என்பது தமிழில் சிறுமை என்ற பொருளைத் தருகின்ற ஒரு சொல்லாகும். (கைக்கிளை, கையொழுங்கை, கைந்நூல் என்ற சொற்களில் உள்ளை கை அத்தகையதே). 'தங்கை' என்ற உறவுப் பெயரில் உள்ள 'கை' தமக்குச் சிறியவள் – இளையவள் என்ற பொருளைத் தருவதாகும்.

**முன்னிலை இடப்பெயரோடு இணைந்த உறவுமுறைப் பெயர்கள்**

தமிழில் முன்னிலை வழக்கிலும் சில உறவுமுறைப் பெயர்கள் வழங்குகின்றன. அத்தகைய முறைப்பெயர்களுட் பெரும்பாலானவை இலங்கையில்– குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வழங்குகின்றன. கொப்பன், கொய்யா, கொப்பா, கொப்பு, கொம்மா, கோத்தை, கோச்சி, கொக்கா, கொண்ணை, கொண்ணன், கொம்மான், கொத்தன் என்பன அத்தகைய பெயர்கள்.

> “இவை முறையே அப்பன், அய்யா, அப்பா, அப்பு, அம்மா, ஆத்தை, ஆச்சி, அக்கா, அண்ணை, அண்ணன், அம்மான், அத்தான் ஆகிய சொற்களை அடிப்படையாகக் கொண்டவை. முன்னிலை வழக்குடைய இவ்வுறவுப் பெயர்கள் இலங்கையில் நீண்ட காலமாக சமூக வாழ்வில் அன்றாட வழக்கில் இருந்து வருகின்றன.
>
> இலங்கையில் உயிர் எழுத்தில் தொடங்கும் முறைப்பெயர்கள் அனைத்துமே முன்னிலை வழக்கமைப்பைப் பெறுகின்றன. சொல்லின் முதலுயிர்க்குப் பதிலாக கொ அல்லது கோ வருகிறது. முதலுயிர் குறிலாயின் கொ வரும் நெடிலாயின் கோ வரும். கொ, கோ ஆகிய இரண்டும் ‘உன்’ என்னும் பொருளைச் சுட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, கொம்மான் என்னும் சொல் உன் அம்மான் எனப் பொருள்படும். இவ்வமைப்பைப் பொறுத்தவரை, உயிரிலே தொடங்கும் முறைப்பெயர் எதுவும் விதிவிலக்கன்று”[3]

இவ்வாறான முறைப்பெயர்களிற் சில, படர்க்கை நிலை முறைப் பெயர்களையும் (உ+ம்: கொப்பன், கொம்மான், கோத்தை, கொண்ணன்) சில, விளிநிலை அமைப்புடைய உறவுப் பெயர்களையும் (உ+ம்: கொப்பா, கொம்மா, கொக்கா) அடிப்படையாகக் கொண்டவை.

முன்னிலை வழக்குடைய உறவுப் பெயர்கள் சில, தமிழ்நாட்டிலும் – குறிப்பாக தென் தமிழ்நாட்டுப் பிராந்தியங்களில் – வழங்குவதாக அறிய முடிகிறது.

> “பேராசிரியர் சண்முகம்பிள்ளை கொப்பன், கொம்மா, கொண்ணன் ஆகிய மூன்று முறைப் பெயர்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யூருக்கு அண்மையில் வாழும் நாடார், கிரு‌ஷ்ணவகைக்காரர் என்போர் பேச்சிலும் வழங்குகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், இராமநாதபுர மாவட்டத்தில் நொப்பன் (உன் அப்பன்), நொம்மா (உன் அம்மா), நொண்ணன் (உன் அண்ணன்) ஆகிய மூன்று உறவுப் பெயர்கள் முன்னிலை வழக்கில் வழங்குகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.
>
> (M. Shanmugampillai, A Tamil Dialect in Ceylon, Indian Linguistics, Vol. 23, 1962) பதினோராண்டிற்குப் பின்னர், மற்றுமோர் அறிஞர் கன்னியாகுமரி மாவட்டத்திற் கேரளத்தைச் சார்ந்துள்ள வில்வங்கோடு, கல்குளம், தாலுகாக்களில் வாழும் நாடார் மத்தியில் கொப்பன் (உன் தந்தை), கொய்யா (உன் தந்தை), கொப்பச்சி (உன் தந்தையின் தந்தை), கொம்மா, கொம்மை (உன் தாய்), கொண்ணன் (உன் மூத்த சகோதரன்), கோத்தா (உன் மூத்த சகோதரி), தொம்பி (உன் இளைய சகோதரன்), தொங்கச்சி (உன் இளைய சகோதரி) ஆகிய முன்னிலை வழக்கு முறைப் பெயர்கள் வழங்குவதாகக் கூறியுள்ளார் (M. Manual, Some Unique Kinship Terms Current in a dialect of Kanyakumari District, International Journal of Dravidian Linguistics, June, 1981, Kerala).”[4]

இவ்வாறான முன்னிலை வழக்குடைய பெயர்கள் பண்டைக் காலத்திலும் பயின்றுள்ளன் இலக்கியங்களிற் பதிவாகியுள்ளன.

உ+ம்: நுந்தை – உன் தந்தை
ஞாய் – உன் தாய்

**தன்மை இடப்பெயரோடு இணைந்த உறவுமுறைப் பெயர்கள்**
தன்மை நிலையிலும் முறைப் பெயர்கள் வழங்கியுள்ளன.

உ+ம்: எந்தை (என் தந்தை)
என்னை (என் தந்தை)
யாய் (என் தாய்)

இத்தகைய சொல்லமைப்பு இன்று வழக்கற்றுப் போய்விட்டது.

முன்னிலை வழக்கு, தன்மை வழக்கு முறைப் பெயர்களுக்கும் முன்பு குறிப்பிட்ட படர்க்கைநிலை முறைப் பெயர்களுக்கும் (தந்தை, தாய், தமையன் முதலானவை) இடையில் வேறுபாடு உண்டு. படர்க்கைநிலை முறைப்பெயர்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று நிலைகளிலும் பேசுபவர்களால் அவ்வவ் வடிவங்களிலேயே பயன்படுத்தப்படும்.

உ+ம்: எனது தந்தை வருவார்
உங்கள் தந்தை வருவார்
அவனது தந்தை வருவார்

ஆனால் தன்மை வழக்கு, முன்னிலை வழக்குப் பெயர்கள் அவ்வாறு பயன்படுத்தப்படுவதில்லை் அவற்றுக்கு முன்னால் என், உன், அவன் என்பன முதலான வேற்றுமை வடிவங்கள் பயன்படுத்தப்படுவதில்லை் அவற்றைப் பயன்படுத்த முடியாது.

உ+ம்: *எனது நுந்தை வந்தான்
*எனது கொப்பா வந்தார்
*எனது எந்தை வந்தார்
*அவனது கொண்ணன் வந்தார்

அவை முறையே தன்மை, முன்னிலை நிலைகளில் மாத்திரமே பயன்படுத்தப்படும்.

முன்னிலை வழக்குடைய முறைப் பெயர்கள் எல்லாத் தரப்பாரிடமும் கையாளப்படுவதில்லை என்பதும் முக்கியமான விடயம். பேசுபவனுக்குச் சமமான அல்லது குறைந்த சமூக படித்தரம் உள்ளவர்கள் தொடர்பாகவே முன்னிலை வழக்கு முறைப் பெயர்கள் கையாளப்படும். சில வேளைகளில் பேசுபவனை விடக் கூடிய சமூக படித்தரத்தில் உள்ளவர்கள் தொடர்பாகவும் கையாளப்படுவதுண்டு. அப்போது, பேசுபவன் கேட்பவன் மீது ஆத்திரம் கொண்டுள்ளான் என அர்த்தப்படும். பேசுபவன் கேட்பவனைத் தனக்குத் தாழ்வாகவோ சமமாகவோ கருதும் பட்சத்திலும் பேசப்படும் உறவு முறைக்கு உரியவர் மீது மரியாதை இருக்கும் பட்சத்தில் மரியாதைப் பொருள் உணர்த்தும் உருபனோடே உரிய முறைப்பெயர் கையாளப்படும்.

உ+ம்: கொப்பர் வந்தார்
கொண்ணர் வந்தார்

ஆனால் உறவுமுறைக்கு உரியவர் மீதும் மரியாதை உணர்வு இல்லை என்றாலோ அல்லது அவர் மீதும் ஆத்திர உணர்வு கொண்டிருந்தாலோ மரியாதைப் பொருளுணர்த்தும் உருபை விடுத்து ஆண்பால் / பெண்பால் உணர்த்தும் உருபுகளே கையாளப்படுவதுண்டு.

உ+ம்: கொப்பன் வந்தான்
கொண்ணன் வந்தான்

**விளிநிலை அமைப்புடைய உறவுமுறைப் பெயர்ககள்**

கந்தன், இராமன், வேலன் முதலான ஆட்பெயர்கள் விளிநிலையில் கந்தா, இராமா, வேலா என மாற்றமுறும். அவ்வாறே அப்பன், அம்மை, அண்ணன், அக்கை முதலான முறைப்பெயர்கள் முறையே அப்பா, அம்மா, அண்ணா, அக்கா என மாற்றமுறும். முறைப்பெயர்கள் ஒருவரை ஒருவர் விளித்துப் பேசுவதற்கே பெரும்பாலும் பயன்படுவன. விளித்துப்பேசுவதே உறவுமுறைப் பெயர்களின் முதன்மை நோக்கமும் பயன்பாடும் என்று கூடக் கொள்ளலாம். சமூக சந்தர்ப்பங்கள் பலவற்றில் அவ்வாறு முறைப்பெயர் கொண்டு அழைக்க வேண்டி / விளிக்க வேண்டி ஏற்படுகின்றது. அவ்வகையில் உறவுமுறைப் பெயர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விளிநிலை வடிவைப் பெறுகின்றன. காலவோட்டத்தில் விளிநிலை வடிவே இயல்பான பெயர் என்ற தன்மை உறவுமுறைப் பெயர்களில் ஏற்பட்டுவிட்டது போலும். உறவுப் பெயர்கள் தற்காலத்தில் பெரும்பாலும் விளிநிலை அமைப்பிலேயே படர்க்கைப் பெயர்களாக வழங்குகின்றன.

உ+ம்: அப்பா வேலைக்குப் போய்விட்டார்
அம்மா கோவிலுக்குப் போகிறா(ர்)
அண்ணா வருவார் / வருவான்

அப்பன், அம்மை, மாமன், பாட்டன், அண்ணன், அக்கை முதலான சொற்களின் விளிநிலை வடிவங்கள் படர்க்கை நிலையில் வழங்குகின்றன.

அப்பன் - அப்பா வந்தார்
அம்மை - அம்மா வந்தா(ள்/ர்) / வந்தாங்க
மாமன் - மாமா வந்தார்
பாட்டன் - பாட்டா வந்தார்
அண்ணன் - அண்ணா வந்தான் / வந்தார்
அக்கை - அக்கா வந்தா (ள்/ர்) வந்தாங்க

இவற்றுட் சில, அடைமொழிகளோடு வேறு வேறு உறவுகளைச் சுட்டும் நிலையிலும் அவ்வாறு வழங்குகின்றன.

உ+ம்

சிற்றப்பன் - சித்தப்பா வந்தார்
பெரியப்பன் - பெரியப்பா வந்தார்
சின்னம்மை - சின்னம்மா (வந்தா(ள்/ர்) /வந்தாங்க
அம்மம்மை - அம்மம்மா வந்தா (ள்/ர்) வந்தாங்க
சின்னமாமன் - சின்னமாமா/ சீனிமாமா வந்தார்

ஆயினும் எல்லா முறைப் பெயர்களும் இவ்வாறு விளிநிலை வடிவில் படர்க்கைப் பெயர்களாக வழங்குவதில்லை. மகன், தம்பி, தங்கை, அம்மான் முதலான சொற்கள் அப்படியானவை. உதாரணமாக மகன் என்ற சொல் விளிநிலையில் 'மகனே' என அமையும். ஆனால் அதே வடிவில் நின்று, படர்க்கைச் சொல்லாக வழங்குவதில்லை. நவீன காலத்துக்கு முந்திய தமிழ் இலக்கியங்களில் முறைப்பெயர்களின் விளிநிலை வடிவங்கள் படர்க்கை நிலையில் வழங்குவதைக் காணமுடிவதில்லை. படர்க்கை வடிவப் பெயர்கள் படர்க்கை நிலையிலும், விளிநிலை வடிவப் பெயர்கள் விளிநிலையிலுமே கையாளப்பட்டுள்ளன. உதாரணமாக,

"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ…"[5]

என்ற பாடலில் படர்க்கை நிலைப் பெயர்கள் படர்க்கையிலும்,

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே….."[6]

“அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே”[7]

என்று விளிநிலை வடிவப் பெயர்கள் விளிநிலையிலும் கையாளப்பட்டுள்ளமையைச் சுட்டலாம்.

“காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா”[8]

என்பது போன்று விளிநிலை வடிவ முறைப் பெயரைப் படர்க்கை நிலையிலும் கையாளும் வழக்குகளை நவீன காலத்து இலக்கியங்களிலேயே அவதானிக்க முடிகிறது.

**உறவுமுறைப் பெயர்கள் பால் உணர்த்துமாறு**

இதுவரையில் உறவு முறைப்பெயர்கள் அமைப்பு ரீதியாகப் பகுத்து நோக்கப்பட்டன. இனி அவை பால் உணர்த்துமாற்றினை நோக்குவோம். தமிழில் வழங்கும் முறைப்பெயர்கள், திணை அடிப்படையில் நோக்கும் போது உயர்திணைக்கு உரியனவாகவே புலப்படுகின்றன. தாய் என்ற முறைப்பெயர் மட்டும் விதிவிலக்காகக் கொள்ளத்தக்கது எனலாம். மனிதன் பகுத்தறிவுள்ள தனக்கான பண்பாட்டு நியமங்களோடு வாழ்கின்ற – சமூக விலங்காக விளங்குவதனாலேயே அவன் பல்வேறு முறைகளில் ஏனையவர்களோடு தொடர்பாடுகிறான். அஃறிணை உயிர்கள் அப்படியான வாழ்க்கைக்கு உரித்துடையன அல்ல. அதனால் மனிதர்கள் விலங்குகள் தொடர்பில் அவற்றின் உறவுமுறை பற்றிச் சிந்திப்பதோ பேசுவதோ இல்லை. தமிழில் முறைப்பெயர்கள் அஃறிணைக்கு உரியனவாகப் பயிலாமைக்கு இதுவே காரணம்.

பால் அடிப்படையில் நோக்கும்போது சில உறவுமுறைப் பெயர்கள் மரபுரீதியான பொருளின் அடிப்படையிலேயே பால் உணர்த்துகின்றனவே அல்லாமல் பாலுணர்த்தும் ஈற்று உருபனால் உணர்த்துவதில்லை. அப்பன், மாமன், அண்ணன், மகன், மச்சான், மைத்துனன் முதலான பெயர்கள் தத்தம் ஈற்றுருபானால் ஆண்பாலை உணர்த்துகின்றன. மகள், அக்காள், மாமி, மச்சாள், மைத்துணி, அண்ணி முதலானவை தத்தம் ஈற்றுருபனால் பெண்பாலை உணர்த்துகின்றன. அப்பா, அண்ணா, அம்மா, தம்பி, தங்கை, தாய், தாத்தா முதலானவை மரபுரீதியாகவே ஆண், பெண்பால்களை உணர்த்துகின்றன. உறவுமுறைப் பெயர்கள் பன்மையை உணர்த்துவதற்கு அர், மார், கள் என்னும் உருபுகளுள் ஒன்றை ஏற்கின்றன.

| **-அர்** | **-மார்** | **-கள்** |
|---|---|---|
| தாயர் | மாமன்மார் | சகோதரிகள் |
| தந்தையர் | மாமிமார் | சகோதரர்கள் |
| | அண்ணன்மார் | சகோதர சகோதரிகள் |

மரியாதைப் பொருள் உணர்த்துவதற்கு – ஆர் உருபு பயன்படுகிறது.

தாயார்
தந்தையார்
மாமனார்
மாமியார்
தம்பியார்

சில உறவுப் பெயர்கள் மரியாதைப் பொருள் தரும் சி என்னும் உருபினை இயல்பாகவே பெற்றமைந்துள்ளன.

ஆய் + சி = ஆய்ச்சி / ஆச்சி
அப்பா +சி = அப்பச்சி
அம்மான்+சி = அம்மாஞ்சி
அண்ணா+சி =அண்ணாச்சி
அக்கா+சி =அக்காச்சி
தங்கை+சி = தங்கைச்சி

**உறவுமுறைப் பெயர்களில் பொருள் மாற்றம்**

வரலாற்று ரீதியில் நோக்கும்போது, உறவுமுறைப் பெயர்கள் எல்லாம் நிலையாக ஒரே உறவுமுறை குறித்து வழங்கவில்லை என்பது தெரியவரும். உதாரணமாக ஐயன் / ஐயா என்னும் சொல் சங்ககாலத்தில் மூத்த சகோதரனைக் குறிக்க வழங்கியது. பிற்காலத்தில் அண்மைக்காலம் வரை இலங்கையில் தந்தையைக் குறித்து வழங்கியது. பொதுவாக எல்லாக் காலத்திலுமே உறவுமுறையில் அல்லாது பெரியவர்கள் எவரையும் சுட்டவும் பயன்படுகிறது. அச்சொல்லே சிங்களத்தில் இன்றும் மூத்த சகோதரனைக் குறிக்கப் பயன்படுகிறது. அதுபோலவே தவ்வை என்ற சொல் தாயைக் குறித்தும் வழங்கியது;[9] மூத்த சகோதரியைக் குறித்தும் வழங்கியது.[10] அக்கா என்ற சொல்லும் அவ்வாறே முற்காலத்தில் தாயைக் குறித்து வழங்கியுள்ளது.[11] இன்று அப்பொருளில் வழங்குவதில்லை. அப்பச்சி என்ற சொல் முற்காலத்தில் தமிழில் தந்தையைக் குறித்து வழங்கியது. இன்றும் சிங்களத்தில் அச்சொல்லே அப்பொருண்மையில் வழங்குகிறது.

தமிழின் உறவு முறைப்பெயர்கள் தொடர்பில் பல்வேறு நிலைகளில் ஆராய வாய்ப்புள்ளது. முதலில் அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் நோக்குவது பயனுடையது. அதற்கான அடிப்படைய முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சு.சுசீந்திரராஜா, *தமிழியல்சார் சிந்தனைத் துளிகள்*, சேமமடு பதிப்பகம், கொழும்பு, 2011, ப.90
2. கால்டுவெல், *திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்* (மொழிபெயர்ப்பு), திருமகள் நிலையம், சென்னை, 1992, ப.548
3. சு.சுசீந்திரராஜா, *மு.கு.*, பக்.90,91
4. *மேற்படி*, ப.91
5. அ.ச.ஞானசம்பந்தன்(ப.ஆ.), *தேவாரத் திருப்பதிகங்கள்*, கங்கை புத்தக நிலையம், சென்னை,1998,பாடல்:7173
6. கா.சுப்பிரமணியபிள்ளை(உ.ஆ.), *திருவாசகம்*, இரத்தின நாயக்கர் ஸன்ஸ், சென்னை, (ஆண்டு குறிப்பிடப்படவில்லை), ப.505
7. அ.ச.ஞானசம்பந்தன், *மு.கு.*, பாடல்:7225
8. வேந்தனார், கவிதைப் பூம்பொழில், மித்ர ஆர்ட்ஸ் & கிரியேசன்ஸ், சென்னை, 2010, ப.79
9. *தமிழ் லெக்சிக்கன்*, தொகுதி : V
10. *மேற்படி*
11. *மேற்படி*, தொகுதி: I